வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் மலர்விழி

தேதி 11.7.2024 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுடெல்லி நிதிஆயோக்கில் புகழ்பெற்ற பொருளாதார வல்லுனர்களுடன், மத்திய பட்ஜெட் பற்றிய கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார்.

நாட்டில் முக்கிய துறை முகங்களின் மேம்பாட்டுப் பணிகள் நிறைவடைந்து விட்டாதாக மத்திய கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்து துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் கூறி உள்ளார்.

உச்சநீதி மன்றத்தில், மனுக்களை தாக்கல் செய்வதற்கான புதிய கவுண்டர், மற்றும், இதர வசதிகளை, தலைமை நீதிபதி திரு சந்திரசூட் இன்று தொடக்கி வைத்தார்.

நீட்-யுஜி நுழைவுத் தேர்வு பற்றிய உச்சநீதிமன்ற வழக்கில், விசாரணைகள் வரும் 18-ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

மோடி-ஆலோசனை

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுடெல்லி நிதிஆயோக்கில் புகழ்பெற்ற பொருளாதார வல்லுனர்களுடன் கலந்துரையாடல் நடத்தினார்.. வரவிருக்கும் மத்திய பட்ஜெட் குறித்த கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை சேகரிக்கும் வகையில் இந்த சந்திப்பு நடைபெற்றது.. மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், நிதி ஆயோக் துணைத் தலைவர் திரு சுமன் பேரி, பிரதமரின் முதன்மைச் செயலர் திரு பி கே மிஸ்ரா ஆகியோரும் இதில் பங்கேற்றனர்.

வரும் 22-ஆம் தேதி தொடங்க உள்ள நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத் தொடரில் நடப்பு நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டை, நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், வரும் 23-ஆம் தேதி தாக்கல் செய்கிறார். பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசின்3-ஆவது பதவிக் காலத்தில, முதலாவது பட்ஜெட்டாக இந்த பட்ஜெட் அமைகிறது. அரசின் தொலைநோக்கு கொள்கைகள் மற்றும் எதிர்காலப் பார்வைகள் பற்றிய திறம்பட்ட ஆவணமாக பட்ஜெட் அமையும் என்று குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, ஏற்கனவே, நாடாளுமன்ற இருஅவைகளின் கலப்புக் கூட்டத்தில் ஆற்றிய உரையில் கூறி உள்ளார். முக்கிமான சமூகப் பொருளாதார முடிவுகளும், வரலாற்று முக்கியத் துவம் வாய்ந்த பல நடவடிக்கைகளும் பட்ஜெட்டில் இடம் பெறும் என அவர் தெரிவித்துள்ளார். மக்களவை தேர்தலுக்கு முன்பாக கடந்த பிப்ரவரி

மாதம் நாடாளுமன்றத்தில் இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டதும் தற்போது புதிய அரசு அமைந்த பின்னர், முழு பட்ஜெட் தாக்கல் செய்யப்படுவதும் குறிப்பிடத் தக்கது.

*பிம்ஸ்-டெக்*

பிம்ஸ்டெக் கூட்டமைப்பில் இடம் பெற்றுள்ள, வங்க கடல் விளிம்பு நாடுகளின், வெளியுறவு அமைச்சர்களுக்கு இடையிலான 2 நாள் கூட்டம் புதுடெல்லியில் இன்று தொடங்கி உள்ளது. வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வரவேற்புரை ஆற்றுகையில் பிம்ஸ்டெக் நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பிற்கு புது ஆற்றல் பாய்ச்சுவதாக இக்கூட்டம் அமையும் என நம்பிக்கை வெளியிட்டார். பிம்ஸ் டெக் நாடுகளுக்கு இடையே, போக்குவரத்து தொடர்புகள், அமைப்புகளின் கட்டுமானம், வர்த்தக ஒத்துழைப்பு, மற்றும் மக்களுக்கான டிஜிட்டல் பொது வசதிகள் குறித்து விவாதிக்கப்படும் என்று அவர் கூறினார். உலக அளவிலும், பிராந்திய நிலையிலும் தற்போது நிகழும் மாற்றங்களை வைத்துப் பார்க்கையில், பிம்ஸ்டெக் நாடுகள், தங்களின் பிரச்சனைகளுக்கான தீர்வுகளை தாமாக உருவாக்கிக் கொள்வதே நல்லது என்று டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார். பொருளாதார ஒத்துழைப்பு போன்ற பல்வேறு அம்சங்களில் நீண்டகாலமாக நிலவும்

இலக்குகளை தற்போது எட்ட, புதிய அவசரம் ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

*கண்காட்சி*

**இந்தியாவிற்கும் தாய்லாந்திற்கும் இடையே பன்னெடுங்காலமாக உள்ள பவுத்த தொடர்புகள்** என்ற தலைப்பில், புதுடெல்லியில் உள்ள தேசிய அருங்காட்சியகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, 25 நாள் புகைப்படக் கண்காட்சியை, மத்திய கலாச்சார அமைச்சர் திரு கஜேந்திரசிங் ஷெகாவத் இன்று தொடக்கி வைத்தார். தாய்லாந்து நாட்டின் வெளியுறவு அமைச்சர் திரு மாரீஸ் சங்கியம்போங்சா உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

*எண்ணெய்*

நாட்டில் எண்ணெய் கண்டுபிடிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் பரப்பளவை, 2030-ஆம் ஆண்டிற்குள், 1 மில்லியன் சதுர கிலோ மீட்டராக உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளதாக, மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார். மத்திய அரசின் ஹைட்ரோ கார்பன் தலைமை இயக்குநரகம் சார்பில், ஊர்ஜா வார்த்தா என்ற பெயரில் புதுடெல்லி பாரத் மண்டபத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் உரையாற்றினார். எண்ணெய் கண்டுபிடிப்பு பணிகளை மேற்கொள்ளத் தகுந்த பகுதிகளுக்கு உரிமம் வழங்குவதற்கான

அரசின் திறந்த நிலை கொள்கை காரணமாக, எண்ணெய் கண்டுபிடிப்பு மற்றும் உற்பத்தி அதிகரித்து இருப்பதாக அமைச்சர் தெரிவித்தார். முறையான தரவுகளின் அப்படையில் எண்ணெய் கண்டுபிடிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுவதை ஊக்குவிக்க, அரசு பெருமளவில் செலவிட்டு வருவதாகவும், நிலத்தில் அதிர்வலைகளை ஏற்படுத்துவதன் மூலம், எண்ணெய் கண்டுபிடிப்பு பணிகளுக்குத் தேவையான தரவுகளை சேகரிக்க, 7 ஆயிரத்து 500 கோடி ரூபாய் முதலீடு செய்யப்படுவதாகவும் அவர் கூறினார்.

நட்டா

தாய்-சேய் இருவரின் நலனையும் பாதுகாக்கும் வகையில் அடுத்தடுத்த 2 கர்ப்பங்களுக்கு இடையே ஆரோக்கியமான இடைவெளியை பேணும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள, சுகம் மாடல் குடும்பக் கட்டுப்பாட்டு திட்டத்தை, உலக மக்கள் தொகை தினமான இன்று புதுடெல்லியில் மத்திய சுகாதார அமைச்சர் திரு ஜேபி நட்டா தொடக்கி வைத்தார். பல்வேறு மாநிலங்களின் சுகாதாரத் துறைகளுக்கு இடையிலான மெய்நிகர் கூட்டத்தில் அவர் பேசுகையில் இந்தியாவில் குடும்பக் கட்டுப்பாட்டு திட்டத்தின் கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தை அக ஆய்வு செய்து கொள்வதற்கான வாய்ப்பாக இன்றைய தினம் அமைந்திருப்பதாக கூறினார். வரவிருக்கும் காலங்களில், குடும்ப

ஆரோக்கியம் பற்றிய தேசிய கணக்கெடுப்புத் தரவுகளின் அடிப்படையில், மக்கள் தொகை விகிதம் அதிகம் உள்ள மாநிலங்கள் மீது முக்கிய கவனம் செலுத்தும் விதத்தில், புதிய உத்திகளை அமல்படுத்துதல் அவசியம் என்று அவர் வலியுறுத்தினார். குடும்பக் கட்டுப்பாடு குறித்து புதிதாக தயாரிக்கப்பட்டுள்ள, தகவல், கல்வி மற்றும் தகவல் தொடர்புக் கையேட்டையும் அமைச்சர் வெளியிட்டார்.

சோனோவால்

நாட்டில் முக்கிய துறைமுகங்களின் மேம்பாட்டுப் பணிகள் நிறைவடைந்து விட்டாதாக மத்திய கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்து துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் கூறி உள்ளார். கலங்கரை விளக்க சுற்றுலாவை ஊக்குவிப்பது குறித்து, திருவனந்தபுரத்தில் உள்ள விழிஞ்ஞும் கலங்கரை விளக்கத்தில், சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினரின் பங்கேற்புடன் இன்று நடைபெற்றக் கூட்டத்தில் அவர் உரையாற்றினார். பிரதமர் திரு நரேந்திர மோடியின் விருப்பப்படி இன்னும் பல இடங்களில், உலகத் தரம் வாய்ந்த கலங்கரை விளக்கங்கள் அமைக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். விழிஞ்ஞும் துறைமுகத்தில் முதலாவது கப்பலாக இன்று வந்து சேர்ந்துள்ள சான் ஃபெர்னாண்டோ சரக்கு பெட்டக கப்பலை வரவேற்கும் வகையில் நாளை நடைபெற உள்ள அதிகாரப் பூர்வ விழாவில் அமைச்சர் திரு

சோனோவால் பங்கேற்கிறார். கேரள முதலமைச்சர் திரு பினராய் விஜயன் மற்றும் இதர அமைச்சர்களுடன், உயர் அதிகாரிகள், முக்கிய பிரமுகர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளும், ஆயிரக் கணக்கிலான பொது மக்களும் பங்கேற்க உள்ளனர். இதற்கிடையே, சீனாவின் ஜியாமென் துறைமுகத்தில் இருந்து வந்துள்ள சான் ஃபெர்னாண்டோ கப்பலுக்கு, இன்று காலை நீர் வணக்கம் செலுத்தி வரவேற்பு அளிக்கப்பட்டது. நாட்டின் முதலாவது ஆழ்கடல் சரக்கு பெட்டக கப்பல் முனையமாக மேம்படுத்தப்பட்டுள்ள விழிஞ்ஞம் துறைமுகத்தில், பெரிய கப்பல்களின் வருகை, வரவிருக்கும் நாட்களில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. இதனால், கப்பல் மாறிச் செல்ல வேண்டிய சரக்குகளுக்கான சர்வதேச துறைமுகங்களின் வரைபடத்தில், கேரளத்திற்கு முக்கிய இடம் கிடைக்கும் என்றும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தள்ளன.

உச்சநீதிமன்றம்

புதுடெல்லியில் உள்ள உச்சநீதிமன்றத்தின் பிரதான வளாகத்தில் மனுக்களை தாக்கல் செய்வதற்கான புதிய கவுண்டர், மற்றும், வழக்குகள் பற்றிய எல்லாத் தகவல்களையும் ஒரே இடத்தில் வழக்கறிஞர்களுக்கு வழங்கும் வசதிகளை, தலைமை நீதிபதி திரு சந்திரசூட் இன்று தொடக்கி வைத்தார். இப்புதிய வசதிகளால் மக்களுக்கான உச்சநீதிமன்றத்தின் தரம் மேம்படும் என்று அவர் தெரிவித்தார். பிரேசில் நாட்டு உச்சநீதிமன்றத்தின்

தலைமை நீதிபதியாக விரைவில் பதவி ஏற்க உள்ள நீதிபதி அன்டோனியோ பெஞ்சமின் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

*நீட்-வழக்கு*

நீட்-யுஜி நுழைவுத் தேர்வு பற்றிய உச்சநீதிமன்ற வழக்கில், விசாரணைகள் வரும் 18-ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. பிரச்சனை குறித்து, மத்திய அரசும், தேசிய தேர்வு முகமையும் தாக்கல் செய்துள்ள பிரமாணப் பத்திரங்கள் மீது, இதர தரப்பினர் பதில் அளிக்க ஏதுவாக, தலைமை நீதிபதி திரு சந்திரசூட் தலைமையிலான அமர்வு, விசாரணைகளில், இன்று இவ்வாறு ஒத்தி வைத்தது. நீட் தேர்வு முடிவுகள் குறித்து விரிவான முறையில் தரவுப் பகுப்பாய்வு மேற்கொள்ள, உச்சநீதிமன்ற உத்தரவின் பேரில், மத்திய கல்வி அமைச்சகம், சென்னை-ஐஐடி உயர்கல்வி நிறுவனத்தை கேட்டுக் கொண்டுள்ளதாக, மத்திய அரசு நேற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்த கூடுதல் பிரமாணப் பத்திரத்தில் தெரிவித்துள்ளது. இதற்கிடையே, நீட்-யுஜி தேர்வு எழுதிய மாணவர்களின் குழு ஒன்று, இன்று புதுடெல்லியில் மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதானை சந்தித்து, தேர்வு குறித்தும், தேர்வின்

போது ஏற்பட்ட சவால்கள் குறித்தும், தங்களின் அனுபங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

*உத்தரபிரதேசம்*

உத்தரபிரதேசத்தில் மழையினால் பல ஆறுகளில் ஏற்பட்ட வெள்ளத்தில், 12 மாவட்டங்களைச் சேர்ந்த 632 கிராமங்கள் சிக்கி உள்ளன. காரா மற்றும் கன்னாட் நதி வெள்ளத்தில் சிக்கி உள்ள 264 பேரை பத்திரமாக மீட்கும் பணிகளில் பாதுகாப்பு படையினர் ஈடுபட்டுள்ளனர். ஷ்ராவஸ்தி மற்றும் பல்ராம்பூர் மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை, முதலமைச்சர் யோகி ஆதித்ய நாத், இன்று நேரில் சென்று பார்வையிட்டார்.

*பத்ரிநாத்*

உத்தராகண்ட் மாநிலம் சாமோலி மாவட்டத்தில், பத்ரிநாத் கோவிலுக்கு செல்வதற்கான தேசிய நெடுஞ்சாலையில் ஜோஷிமத் அருகே மழையினால் ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக, இன்று 3-ஆவது நாளாகவும் வாகனப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. ஆயினும் பயணிகள் பாதுகாப்பான முறையில் நடந்தே சாலையை கடக்க மாநில பேரிடர் மீட்புப் படையினர் உதவி வருகின்றனர். இதற்கிடையே பட்டால் கங்கா லாங்சி சுரங்கப் பாதை அருகே நேற்று மணல் சரிவு ஏற்பட்ட இடத்தில் இருந்து இடிபாடுகள் அகற்றப்பட்டதைத் தொடர்ந்து,

இன்று முதல் போக்குவரத்து மீண்டும் தொடங்கி உள்ளது. உத்தராகண்டில் ஹரித்துவார், டேராடூன், நைனிடால் உள்ளிட்ட மாவட்டங்களில் இன்று கனமழை முதல் மிக கனமழை பெய்யக் கூடும் என வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது.

*புதுச்சேரி-விவசாயிகள்*

புதுச்சேரியில் நெல்,கரும்பு,வாழை, உளுந்து, பாசிப்பயிறு மற்றும் நிலக்கடலை பயிரிட்டுள்ள விவசாயிகள் உழவர் உதவியகத்தில் விதைப்பு சான்றிதழ் பெற்று, தங்கள் பகுதியில் உள்ள பொது சேவை மையங்கள் மூலமாக, பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டத்திற்கு பதிவு செய்து கொள்ளலாம் என வேளாண் துறை அறிவித்துள்ளது. கிசான் கடன் அட்டை மூலமாக கடன் பெற்ற விவசாயிகளின் பயிர்கள் தானாகவே காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வந்து விடும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*வானொலி- நாடகம்*

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வானொலி நிலையங்கள் இணைந்து வழங்கும், **வானொலி நாடக விழா- 2024-ல்**, புதுச்சேரி வானொலி நிலையத்தின் படைப்பான **கொல்லத்தான் நினைக்கிறேன்** வானொலி நாடகம், இன்று இரவு 8.30 மணிக்கு ஒலிபரப்பாக உள்ளது. தமிழகம்

மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களின் முதன்மை அலைவரிசைகளில், இந்நாடகத்தை கேட்கலாம்.

நாடகத்தை எழுதியவர்-ஜி நாகதேவன் அவர்கள்.

படைப்பு-மயிலாடுதுறை த. செந்தில்குமார், ஸ்ரீனிவாச முருகன் ஆகியோர்.

*மீனவர்*

கச்சத்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த, புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த 13 தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்து, மேல் விசாரணைக்காக காங்கேசம் துறைக்கு அழைத்துச் சென்றுள்ளனர். அண்மையில் கடந்த 1-ஆம் தேதி 25 தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டதும் குறிப்பிடத் தக்கது.

*ரத யாத்திரை*

ஒடிசாவில் புகழ்பெற்ற பூரி ஜெகன்னாதர் ரத யாத்திரை விழாவின் ஒரு பகுதியாக இன்று நடைபெற்ற ஹேரா பஞ்சமி தின விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். யாத்திரைத் தேர்கள் நிலைக்கு திரும்பும் பயணம் தொடங்குவதைக் குறிக்கும் நாளாகவும் ஹேரா பஞ்சமி தினம் அமைகிறது.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுடெல்லி நிதிஆயோக்கில் புகழ்பெற்ற பொருளாதார வல்லுனர்களுடன், மத்திய பட்ஜெட் பற்றிய கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார்.

நாட்டில் முக்கிய துறைமுகங்களின் மேம்பாட்டுப் பணிகள் நிறைவடைந்து விட்டாதாக மத்திய கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்து துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் கூறி உள்ளார்.

உச்சநீதி மன்றத்தில், மனுக்களை தாக்கல் செய்வதற்கான புதிய கவுண்டர், மற்றும், இதர வசதிகளை, தலைமை நீதிபதி திரு சந்திரசூட் இன்று தொடக்கி வைத்தார்.

நீட்-யுஜி நுழைவுத் தேர்வு பற்றிய உச்சநீதிமன்ற வழக்கில், விசாரணைகள் வரும் 18-ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

---------------------------